# அரநாயக்க பிரதேச சபை

## கேகாலை மாவட்டம்

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2017 பெப்ரவரி 28 ஆந் திகதியும் முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2016 மார்ச் 31 ஆந் திகதியும் கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2017 ஜுன் 22 ஆந் திகதி சபையின் செயலாளருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் தரப்பட்டுள்ள விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து பிரதேச சபையின் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) சப்ரகமுவ மாகாணக் காணி, மாகாண நீர்வள, கால்நடை உற்பத்தியும் கால்நடை சுகாதாரம் மற்றும் மீன்பிடி நடவடிக்கை அமைச்சரவையின் ஒதிக்கீட்டின் கீழ் மீளாய்வாண்டில் செய்யப்பட்ட 09 வேலைகள் தொடர்பாக நூற்றுக்கு 10 வீத பிடிமானத் தொகை கணக்கீடு செய்யப்படாததனால் மீளாய்வாண்டிற்கான மூலதன நன்கொடை மற்றும் மூலதனச் செலவிலும் ரூபா. 255,995 வினால் குறைந்து காணப்படுகின்றது.

(ஆ) 2016 பொது நிதியின் கீழ் செய்து முடிக்கப்பட்ட முடிவுற்ற வேலைக்கான பெறுமதி ரூபா. 1,235,973 ஆக இருந்தாலும் கடன்கொடுத்தோருக்கான ஒதிக்கீட்டில் ரூபா.1,300,000 வினை ஒதிக்கீடு செய்ததனால் மீளாய்வாண்டின் மிகை ரூபா. 64,027 குறைந்தும் 2016 திசெம்பர் 31 ஆந் திகதி கடன்கொடுத்தோர் தொகையில் அப்பெறுமதி அதிகரித்தும் காணப்பட்டது.

(எ) களியாட்ட வரியாக மீளாய்வாண்டில் கிடைக்கப் பெற்ற ரூபா.10,000 வினை வைப்புக் கணக்கில் செலவாக பதிந்தமையால் மீளாய்வாண்டின் மிகை ரூபா. 10,000 குறைந்தும் 2016 திசம்பர் 31 ஆந் திகதி வைப்புக் கணக்கு மீதி அப்பெறுமதியினால் அதிகரித்தும் காணப்பட்டது.

(ஏ) சபையில் சேவையில் ஈடுபட்டிருக்கும் 36 உத்தியோகத்தர்களின் ஊழியர் பிணை வைப்புத் தொகை ரூபா.157,983 வாகும். ஆயினும் ஊழியர் பிணை வைப்புத் தொகையாக ரூபா.163,323 என கணக்கு வைக்கப்பட்டிருப்பதனால் 2016 திசம்பர் 31 ஆந் திகதி ஊழியர் பிணை வைப்பு மற்றும் மீளக் செலுத்தும் ஊழியர் பிணை வைப்பும் ரூபா. 5,340 வினால் அதிகரித்தும் காணப்பட்டது.

### 1.3.2 இணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

மீளாய்வாண்டின் இறுதியில் 02 கணக்கு விடயங்களுக்குரிய நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் மீதிகளின் கூட்:டுத்தொகை ரூபா. 9,728,412 ஆக இருந்ததுடன் அதற்குரிய உபயோகப் பதிவேடுகளின் பிரகாரம் கணக்கு மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா. 8,715,148 ஆனததனால் வேறுபாடு ரூபா. 1,013,264 ஆக இருந்தது.

### 1.3.3 தொங்கல் கணக்கு

13 வருடங்களாக முன்கொண்டுவரப்படுகின்ற ரூபா.672,333 தொகையினை தொங்கல் கணக்கின் செலவு மீதியை மீளாய்வாண்டின் போதும் தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

1.3.4 <u>பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்</u>

<u>பெறவேண்டிய கணக்கு</u>

2016 திசம்பர் 31 ஆம் திகதிக்கு 01 வருட காலத்தை விஞ்சிய பெறவேண்டிய கணக்கு மீதிகளின் பெறுமதி ரூபா. 4,054,877 ஆகும்.

1.3.5 <u>சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மாணங்களுடன் இணங்காமை</u>

பின்வரும் சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மாணங்களுடன் இணங்காமைகள் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மாணங்களுடனான தொடர்பு | இணங்காமை |
| --- | --- |
| அ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணக் கோவை<br>(1) நி.பி.110 | சபையினால் சேதம் மற்றும் இழப்பு பதிவுப் புத்தகம் பேணப்படததனால் 2012 வருடத்திலிருந்து 2015 வருடம் வரை 02 வாகனம், பெகோ இயந்திரம் மற்றும் தகனம் செய்யுமிடத்தில் ஏற்பட்ட வெடிப்பு போன்றவற்றால் ஏற்பட்ட சேத்தின் கூட்டுத்தொகை ரூபா.1,710,219 வும் மீளாய்வாண்டில் சபைக்குரிய கெப் வண்டி மற்றும் பெகோலோடர் இயந்திரத்திற்கு ஏற்பட்ட சேதம் முறையாக ரூபா. 587,169 மற்றும் ரூபா.2,297,388 சேதம் மற்றும் இழப்பு பதிவுப் புத்தகத்தில் பதிவு செய்யப்பட்டிருக்கவில்லை. |
| (11) நி.பி.371 | 1999 வருடத்திலிருந்து 2000 வருடம் வரை 07 சந்தர்ப்பங்களின் போது வழங்கப்பட்ட ரூபா.45,683 கூட்டுத்தொகையான முற்பணம் தீர்க்கப்பட்டிருக்கவில்லை. |

(111) நி.பி.1645(அ) சபைக்குரிய 15 வாகனம் தொடர்பாக ளொக் பதிவுப் புத்தகம் புதுப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(iv) நி.பி.1646

சபைக்குரிய 04 வாகனங்கள் தொடர்பாக செலுத்தும் குறிப்பு புத்தகம் சமர்ப்பிப்பதற்கு 08 மாதத்திலிருந்து 02 வருடம் தாமதமாகிததுடன் 06 வாகனம் தொடர்பாக செலுத்தும் குறிப்புப் புத்தகத்தை கணக்காய்விற்கு சமர்ப்பித்து இருக்கவில்லை.

(ஆ) 2016 திசம்பர் 29 ஆம் திகதி 30/2016 இலக்க பொது நிருவாக சுற்றுநிருபத்தில் எதிர்பார்க்கப்பட்டவாறு சபைக்குரிய வாகனம் தொடர்பாக எரிபொருள் சோதனை செய்யப்பட்டிருக்க வில்லை.

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவு

சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2016 திசெம்பர் 31 ஆம் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் செலவை விஞ்சிய வருமானம் ரூபா. 9,011,086 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா. 9,930,290 ஆக இருந்தமையால் மீளாய்வாண்டின் நிதி விளைவில் ரூபா.919,204 வீழ்ச்சியொன்றைக் காணபித்தது.

### 2.2 பகுப்பாய்வு ரீதியான நிதி மீளாய்வு

நிதி விளைவுகள் ரூபா. 919,204 தொகை வீழ்ச்சியடைவதற்கு 03 வருமான விடயங்களில் குறைவும் 05 செலவின விடயங்களில் அதிகரிப்பும் பிரமானமாகத் தாக்கமளித்திருந்தன.

## 2.3 வருமான நிர்வாகம்

### 2.3.1 வருமானம் சேகரித்தலின் செயலாற்றல்

மீளாய்வாண்டிற்குரியதாகச் சமர்ப்பிக்கப்பட்ட மதிப்பிடப்பட்ட வருமானம், உள்ளபடியான வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| | | | | | | 2016.12.31 இல் நிலுவை | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | வருமான மூலம் | 2016.01.01 இல் நிலுவை | 2016.12.31 இல் நிலுவையில் அறவீடு | 2016 ஆம் ஆண்டில் பற்றுச்சீட்டிடல் | ஆண்டின் பற்றுச்சீட்டிடல்களில் அறவீடு | 2016.01.01 இல் காணப்பட்ட மீதி | ஆண்டின் பற்றுச்சீட்டில்களில் நிலுவை | மொத்த நிலுவை |
| | | ரூபா.000 | ரூபா.000 | ரூபா.000 | ரூபா.000 | ரூபா.000 | ரூபா.000 | ரூபா.000 |
| i | ஆதனவரியும் வரியும் | 820 | 567 | 2,633 | 2,455 | 253 | 178 | 431 |
| ii | வாடகை | 319 | 44 | 73 | 73 | 275 | - | 275 |
| iii | அனுமதிப்பத்திரக் கட்டணம் | 1 | - | 169 | 162 | 1 | 7 | 8 |
| iv | ஏனைய வருமானம் | 13,281 | 7,662 | 38,963 | 25,573 | 5,619 | 13,390 | 19,009 |
| | மொத்தம் | 14,421 | 8,273 | 41,838 | 28,263 | 6,148 | 13,575 | 19,723 |

0 2 6 1
1 0 . .
2 1 0 0

### 2.3.2 காணி கூறிட்டு விற்பனை மீதான கட்டணம்

சபைக்குரிய பிரதேசத்தினுல் காணி கூறிட்டு விற்பனை மூலம் அறவிடப்பட்ட ரூபா.172,145 உரிய நூற்றுக்கு ஒன்று வீத கட்டணத்தை வைப்புக்கள் கணக்கில் வைக்கப்பட்டிருந்தது.

### 2.3.3 நிரந்தர விளம்பரப் பலகை மீதான கட்டணம்

சபைக்குரிய பிரதேசத்தினுல் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ள நிரந்தர விளம்பரப் பலகை மூலம் சதுர அடிக்கு ரூபா.50 என்ற அடிப்படையில் அறவிட முடியுமாகவிருந்தும் காட்சிக்கு வைக்கப்பட்டிருந்த 21 நிரந்தர விளம்பரப் பலகைகள் மூலம் கிடைக்க வேண்டிய ரூபா.15,850 இனை அறவிட்டிருக்க வில்லை.

2.3.4 <u>நிலுவை கடை வாடகை</u>

திப்பிட்டிய பொதுச் சந்தையில் 02 கடைகளுக்கான நிலுவை கடை வாடகை ரூபா.5,838 வினை அறவிடுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

2.3.5 <u>நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்</u>

மாகாண சபையின் பிரதான செயலாளரிடமிருந்தும் ஏனைய அதிகாரத் தரப்பினரிடமிருந்தும் 2016 திசெம்பர் 31 ஆம் திகதியில் கிடைக்க வேண்டிய நீதிமன்றத் தண்டப்பணம் ரூபா.2,197,373 மற்றும் முத்திரைக் கட்டணம் ரூபா.14,085,124 ஆகும்.

3 <u>செயற்பாட்டு மீளாய்வு</u>

3.1 <u>முகாமைத்துவ செயற்திறனின்மை</u>

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) வாகனத் திருத்த வேலைகளின் போது கழற்றி அகற்றப்படுகின்ற பாவனைக்குதவாத பகுதிகள் மற்றும் வாகனங்களிலிருந்து அகற்றப்படுகின்ற டயர், டியுப், மற்றும் பற்ட்டரி போன்றவற்றை சரியான முறையில் பதிவு செய்திருக்கவில்லை.

(ஆ) சபைச் சொந்தமான 19 வாகனங்களுக்கு 05 சாரதிகள் மாத்திரம் சேவையில் ஈடுபட்டிருந்தமையினால் வாகனங்களின் பயன்பாடு குறைவாகக் காணப்பட்டது.

(எ) உள்ளூராட்சி மாகாண சபைகள் அமைச்சு, மாகாண சபை மற்றும் பல்வேறு நிறுவனங்களின் வேலைத்திட்டங்களினால் கிடைத்த ரூபா. 33,021,588 பொறுமதியான 11 வாகனங்களின் உரிமையினை பிரதேச சபையின் பெயரில் கையேற்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

3.2 செயற்பாட்டு செயற்திறனின்மை

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) திப்பிட்டிய ஆயுர்வேத மருந்தகத்தில் அத்தியவசியமான 22 மருந்து வகைகள் ஒரு மாதகாலமாக இல்லாததனால் நோயாளிகளுக்கு இந்த சேவை சரியான முறையில் வழங்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2015 பாதீட்டுப் பிரேரணையின் கீழ் பிரதேச சபைகளினை வலுப்படுத்தும் தேசிய வேலைத் திட்டத்திற்காக பொது நிர்வாக, உள்ளூராட்சி மற்றும் சோசலிச நிர்வாகம் தொடர்பான அமைச்சினால் வழங்கப்பட்ட ரூபா.692,421 வினை குறித்த வேலைகளுக்கு பயன்படுத்தாமல் பொது வைப்புக் கணக்கில் வைக்கப்பட்டிருந்தது.

3.3 திண்மக் கழிவு முகாமைத்துவம்

சபையினால் திண்மக் கழிவு அகற்றும் முறையான திட்டமொன்று நடைமுறைப் படுத்தப்பட்டிருக்கவில்லாததுடன், சபையின் அதிகார எல்லைக்குல் சேகரிக்கப்படுகின்ற கழிவுகள் பொல்லம்பகொட பொது மயானத்தில் இருக்கும் குழியொன்றினுல் போடப்படுகின்றது.

4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுயையும்

4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டிற்காக சமர்பிக்கப்பட்ட பாதீட்டில் செலவுவிடயங்கள் 05 தொடர்பாக மொத்தம் ரூபா.180,000 நிதி ஒதிக்கீடு நூற்றுக்கு 100 வீதமும், செலவுவிடயங்கள் 04 தொடர்பாக மொத்தம் ரூபா.801,041 நிதி ஒதிக்கீடு நூற்றுக்கு 40 முதல் 98 வரை பயன்படுத்தப்பட்டிருக்கலில்லை.

(ஆ) 04 வருமானத் தலைப்புக்களில் மதிப்பிடப்பட்ட வருமானத்தில் நூற்றுக்கு 72 முதல் 88 வரை கூட்டுமொத்தமான ரூபா.294,449 வருமானத்தை உழைப்பதற்கு சபை தவறியிருந்தது.

## 4.2 உள்ளக கணக்காய்வு

1988 இன் பிரதேச சபைகள் நிதி நிர்வாக விதிக் கோவையின் 5(7) இன் பிரகாரம் நிதி மற்றும் கயஞ்சியம் தொடர்பாக போதிய உள்ளக கணக்காய்வை நடாத்திச் செல்லல் தலைவரின் செயற்பணியாக இருந்த போதிலும் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 5. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகளில் சபையின் விசேட கவனம் கோரப்படுகின்றது.

| முறைமை | அவதானிக்க வேண்டிய விடயம் |
|---|---|
| (அ) கணக்கீடு | (i) வைப்புப் பதிவேட்டு புதுப்பிக்கப்பட்டிருக்க வில்லை.<br>(ii) நிலையான சொத்துப் பதிவேடு புதுப்பிக்கப்பட்டிருக்க வில்லை.<br>(iii) தொங்கல் கணக்கு மீதி தொடர்பாக நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லை. |
| (ஆ) பாதீட்டுக் கட்டுப்பாடு | (i) செலவு ஒதிக்கீட்டில் கவனம் செலுத்தக் கூடிய அளவில் ஒதிகீடுகள் மிகுதியாக இருந்தது.<br>( (ii) மதிப்பீட்டு வருமானம் அறவிடப்பட்டிருக்க வில்லை. |
| (எ) வருமான நிர்வாகம் | நிலுவை வருமானம் அறவிடப்பட்டிருக்கவில்லை. |
| (ஏ) வாகன நிர்வாகம் | (i) நாளாந்த செலுத்தும் பதிவுப் புத்தகம் சம ர்ப்பிக்கப்படவில்லை.<br>(ii) வாகன ளொக் பதிவேடு புதுப்பிக்கப்பட்டிருக்க வில்லை.<br>(iii) வாகனங்களின் எரிபொருள் பரிதோசனை செய்யப்பட்டிருக்கவில்லை. |